

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாராயகர் நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் கூட்டம் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற பணிகள் குறித்து கழக துணைபொதுச்செயலாளர் அ.ராசா.எம்.பி கலந்துகொண்டு ஆலோசனைகளை மேற்கொண்டார். இதில் பகுதிச்செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, தியாகராய நகர் தொகுதி பொறுப்பாளர் ரத்னாலோகேஸ்வரன், தியாகராயநகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு, வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

துணைவேந்தர்கள் நியமன அதிகாரம்:

# தமிழ்நாடு அரசின் மனு - மே 26ல் உச்சநீதிமன்றத்தில் விசாரணை!

புதுடெல்லி, மே.24-

துணைவேந்தர்கள் நியமன அதிகாரம் குறித்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு வரும் 26 ஆம்தேதி விசாரணைக்கு வருகிறது.

துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் பா.ஜ.க. நிர்வாகி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் பதிலளிக்க தமிழ்நாடு அரசுக்கு போதிய அவகாசம் வழங்காமல் சட்டங்களுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு விதித்தது.

இந்த நிலையில், துணைவேந்தர்கள் நியமன அதிகாரம் குறித்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி தமிழ்நாடு அரசு மனுதாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் மனு மீது உச்சநீதிமன்ற நீதிபதிகள் சூர்ய காந்த், திபான்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு வருகின்ற 26ம் தேதி விசாரணை நடத்துகிறது.



திருவள்ளூர் தொகுதிக்கு உட்பட்ட நகர, ஊராட்சி பகுதிகளில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டப்பணிகள் குறித்தும், மேலும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் சந்தித்து சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் க.திராவிடபக்தன், சி.ஜெயபாரதி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், கூளூர்.எம். இராஜேந்திரன், மோ. இரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி. எஸ். நேதாஜி, தா.மோதிலால், சித்திக்அலி, எம். எம். லிங்கேஷ்குமார், ஆர். வாசு, கொப்பூர் டி. திலீப்குமார், வேலன் , காஞ்சிப்பாடி பி. சரவணன், ஆர். மோகனசுந்தரம் , திலகன், அருள்தாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# கடலூர் கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், மே 24-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் 26.05.2025 திங்கட்கிழமை அன்று நடைபெறும் என்று மாவட்ட திமுக செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட



திமுக செயற்குழு கூட்டம் 26.05.2025 திங்கட்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்கப்பட உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா

2. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக

3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

வியாசர்பாடியில் இரவீஸ்வரர் கோயிலில்

# ரூ.55.85 இலட்சம் மதிப்பில் திருமண மண்டபம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, மே 24-

வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ.55.85 இலட்சம் செலவில் கட்டப்பட்ட திருமண மண்டபத்தை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (23.5.2025) சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ. 55.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மரகதாம்பாள் திருமண மண்டபத்தை திறந்து வைத்தார்.

அதன் பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையானது திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி தருவதிலும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி பாதுகாப்பதிலும் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

அந்த வகையில் வியாசர்பாடி, 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த இரவீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ. 55.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மரகதாம்பாள் திருமண மண்டபத்தினை இன்றைய தினம் திறந்து வைத்துள்ளோம். இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்றுள்ள நிலையில் திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலை மட்டம் உயர்ந்த காரணத்தினால் இத்திருக்கோயில் 5 அடி தாழ்வாக இருந்த நிலையில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் சுவாமி, அம்பாள் சன்னதிகள், மகா மண்டபம், நந்தி மண்டபம், கொடிமரம், பலிபீடம் போன்றவற்றை சாலை மட்டத்திலிந்து 8½ அடி உயர்த்திட பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், இத்திருக்கோயிலின் திருக்குளமானது ரூ.87.90 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் இப்படி எண்ணற்ற திருப்பணிகளை மேற்கொண்டு ஆன்மிக அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர் மா.ஆச்சி சிவப்பிரகாசம், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமலாக்கத் துறையின் நடவடிக்கைக்கு உச்சநீதிமன்றம் தடை!

# கூட்டாட்சித் தத்துவத்தை நிலை நிறுத்துவதற்கான நடவடிக்கை!

## விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் வரவேற்பு!

சென்னை, மே 24-

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

டாஸ்மாக்கின் விசாரணைக்கு அமலாக்கத் துறைக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் வழக்கில், உச்சநீதிமன்றம் தடை விதித்தி



ருப்பது கூட்டாட்சி தத்துவத்தை மீண்டும் நிலை நிறுத்தி உள்ள செயலாகும். இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தமிழ்நாடு அரசு நிறுவனமான டாஸ்மாக் மீது வழக்கு தொடுத்து, அமுலாக்கத்துறை விசாரணையை மேற்கொண்டு வந்தது. இது மாநில அரசின் மீது அமலாக்கத்துறை நடத்திய அத்து மீறிய தாக்குதலாகும். அரசு நிறுவனத்தின் செயல்பாட்டை முடக்கும் செயலாகும். எனவே இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வைத்த கோரிக்கையை ஏற்று அந்த வழக்கில் அமலாக்க துறையின் சோதனைக்கு இடைக்காலத் தடை வழங்கி உள்ளது.

இந்தத் தீர்ப்பின் பொழுது உச்சநீதிமன்றம் எழுப்பியுள்ள கேள்விகள் கூட்டாட்சி தத்துவத்தை நிலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளாகும். தனி நபர் மீது வழக்கு தொடுக்கலாம். ஒரு அரசு நிறு வனத்தின் மீது எப்படி வழக்கு தொடுக்க முடியும்?. அனைத்து எல்லைகளையும் மீறி அமலாக்கத்துறை வரம்பு மீறி நடந்துள்ளது என்று அமலாக்க துறையை உச்சநீதிமன்றம் கடுமையாக கடிந்துள்ளது. இது அமுலாக்க துறைக்கு மட்டுமல்ல, அமலாக்க துறையை ஏவி விடும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கொடுத்த சாட்டையடியாகும்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. தலைமையிலான மோடி அரசு அமைந்த பின்பு மோடி அமித்ஷா கூட்டணி பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களை மிரட்டி பணிய வைக்க, அந்த ஆட்சிகளை பாரதிய ஜனதா ஆட்சியாக மாற்றிட; அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, சிபிஐ போன்ற அரசு நிறுவனங்களை ஆளுங்கட்சியின் அமைப்புகளாக மாற்றி, பா.ஜ.க ஆட்சி அல்லாத மாநிலங்கள் மீது ஏவி விடப்பட்டு வருவது நாடறிந்த உண்மையாகும். இப்படி நடவடிக்கை எடுப்பது, அப்படி நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்கள் பாரதிய ஜனதா கட்சியில் சேர்ந்தால் அவர்களை புனிதர்களாக்கி பொறுப்பு வழங்குவது என்பது பாரதிய ஜனதா கட்சியின் மோசமான செயலாகும்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமைகளை எந்த வகையிலும் சமரசம் செய்து கொள்ளாமல் அதனை நிலை நிறுத்துவதற்கு கடுமையாக ஒன்றிய அரசோடு போராடி வருவது அனைவரும் அறிந்ததே!.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை அச்சுறுத்தவும், பணிய வைக்கவும் தொடர்ந்து இந்திய அரசு அமலாக்கத்துறை, வருவாத்துறை, ஊகூஷஐ போன்ற அரசு நிறு வனங்களை கொண்டு சோதனை நடத்துவது, வழக்கு தொடுப்பது என்று தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் டாஸ்மாக் மீது அதாவது தமிழ்நாடு அரசு நிறுவனத்தின் மீது வழக்கு தொடுத்து அமலாக்கத்துறை சோதனைகளை நடத்தி வந்தது.

இதனை எதிர்த்த வழக்கில் நீதிமன்றம் வழங்கி இருக்கிற தீர்ப்பும், எழுப்பிருக்கிற கேள்வியும் ஒன்றிய அரசுக்கு விடுத்த மிகப் பெரிய எச்சரிக்கையாகும்.

இதனை மோடி அமித்ஷா கூட்டணி எண்ணிப் பார்த்து இதன் பிரகாவது தங்களுடைய இப்படிப்பட்ட அரசியல் இழி செயலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்தாண்டு தமிழ்நாட்டில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் பெற உள்ள அமோக வெற்றியினை தடுத்து நிறுத்திட இப்படிப்பட்ட கோழைத்தனமான செயல்களில் ஒன்றிய அரசு ஈடுபடுவது மிகுந்த கண்டத்திற்குரியதாகும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புவோமாக.

இவ்வாறு அவர் கூறினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி பகுதியைச் சேர்ந்த சங்கமித்ரா சிறுமி ஆந்திர பிரதேசம் குண்டூர் பகுதியில் 13 வயது உட்பட்ட இந்திய அளவில் நடைபெற்ற வில்வித்தை போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்ற நிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அவர்களை சந்தித்து வெற்றி பெற்ற கோப்பை மற்றும் தங்க பதக்கத்தை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் நிர்வாகிகள் பா.து.தமிழரசன், ஞாயிறு ஆனந்தகுமார் உள்பட பலர் உள்ளனர்.



கத்தார் தி.மு.க. அமைப்பின் அயலக அணிக்கு புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் கத்தார் நாட்டின் தலைநகர் தோகாவில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கத்தார் வாழ் தமிழ் மக்கள் மற்றும் பிரதிநிதிகள் என அனைவரும் கலந்து கொண்டு அமைப்பின் நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்பித்தனர்.

# சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் 25-05-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜெ.ஜெ.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்விழா.

2. கழக ஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



காஞ்சிபரம் மாநகராட்சி, 7–வது வார்டு, வைகுண்ட பெருமாள் மாட வீதியில், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையினை சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், அ. தசரதன், மாநகர நிர்வாகிகள் கே. ஏ. செங்குட்டுவன், பி.நிர்மலா, மாவட்ட பிரதிநிதிகள் சங்கர், சேகர், பாலமுருகன், மாமல்லன், வட்ட செயலாளர்கள் எஸ்.செந்தில், கே. சண்முகம், எஸ். வரதன், ஏ.எஸ். ரவி, கே.எஸ்.வேல்முருகன், கழக நிர்வாகிகள் ஜி. குமரேசன், ஆர்.வினோத்குமார், பி.எஸ். குடியரசு, ஆர்.சந்தீப், வி. பகவான், பொன். தமிழரசன், எம். குமார், வி. சதிஷ்குமார் (எ) பிரனவ்சதீஷ், மோகன், சோமசுந்தரமூர்த்தி, ஆனந்தன், நவீன்குமார், கந்தன், சூர்யா, அணிகளின் நிர்வாகிகள் டி. ஜெய்கணேஷ், ஏ. செல்வி, விஜயா புருஷோத்தமன், வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர்கள் சித்ரா ராமசந்திரன், சரஸ்வதி பாலமுருகன், பூங்கொடி தசரதன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.